# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

## தலைமைச் செயலகம், சென்னை–600 009.

**அறிவிக்கை எண் 1 / 2023, நாள் 01.07.2023**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் தொலைபேசி இணைப்பாளர் காலிப்பணியிடத்தினை நிரப்பும்பொருட்டு, கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் / காலிப்பணியிட எண்ணிக்கை | ஊதிய மட்டம் | வயது 01.07.2023 அன்றுள்ளபடி | தகுதி | இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| தொலைப்பேசி இணைப்பாளர் காலிப் பணியிட எண்ணிக்கை–1 (ஒன்று) | ரூ.19500 – 71900 (ஊதிய மட்டம்–8) | 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும் (ம) பொதுப் பிரிவு – 32 வயதிற்குள்ளும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர்–34 வயதிற்குள்ளும், ஆதிதிராவிடர் வகுப்பினர் (ம) பழங்குடியினர்–37 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும்.<br><br>மாற்றுத் திறனாளிகள் – வயது உச்சவரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள்.<br><br>2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், பிரிவு 20(8)–ம் பொருந்தும். | (I) 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், பிரிவு 20(1)–இல் படிக்கப்பெறும் அட்டவணை III–இல் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி அல்லது அதற்கு இணையான தகுதிகள் மற்றும்<br><br>(ii) தொலைபேசி இணைப்பகச் செயல்பாட்டிற்கு தேவையான பயிற்சி சான்றிதழை தொலைபேசி துறை அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசி நிறுவனத்தில் பெற்றிருக்க வேண்டும்.<br><br>இருப்பினும், மற்ற தகுதிகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தொலைபேசி இணைப்பாளர் பணியினை மேற்கொள்வதற்கு மருத்துவ ரீதியாக அறிவிக்கப்பட்ட உடல் ஊனமுற்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | பொதுப் பிரிவு (முன்னுரிமை) |

அனைத்து சுய விவரங்கள் அடங்கிய புகைப்படத்துடன் மற்றும் சுயசான்றொப்பமிட்ட தகுதிக்கான அனைத்து சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் **"செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், தலைமைச் செயலகம், சென்னை–600 009"** என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **17.07.2023.**

கடைசி நாளுக்கு பின்னர் பெறப்படும் மற்றும் தகுதி சான்றிதழ் நகல்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செ.ம.தொ.இ./743/வரைகலை/2023

செயலாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–600 009.

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**